விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 5 றவி ஆகிர் 22 -இதழ் 5
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-2-82

"யாழ். அபிவிருத்தி சபைக்கு

# அரசு முன்னுரிமை வழங்கி எதுவுமே செய்யவில்லை!'

## சபைக் கூட்டத்தில் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட அபிவிருத்திசபையைப் பொறுத்தவரை அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து எதுவும் இதுவரை செய்யவில்லை'' என்று திரு. ஜே. கு. அழகையா, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்

யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டம், யாழ் செயலகத்தில அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.

**உயர்மட்ட மகாநாடு**

''யாழ். மாவட்ட அபிவிருத்திசபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# கச்சதீவு பகுதியில் கடுமையான கண்காணிப்பு!

## கடற்படை முகாமும் அமைக்கப்பட்டது!

(கொழும்பு)

**குறிகாட்டுவான் இறங்குதுறையில் கடந்த சனிக்கிழமை இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டு, ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வடபகுதியில் ஆயுதப்படையினரின் ரோந்து, மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக கச்சதீவில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.**

இராணுவவீரர் கொலை மற்றும் ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் விசாரணைசெய்யப்பட்டு, முப்பது பேர் கைதுசெய்யப்பட்டுள்ளபோதிலும், ஆயுதப்படையினர் முக்கியநபர்களைத் தேடி பரவலாக வலைவிரித்துள்ளனர் என்றும், இந்தநபர்கள் சம்பந்தமாக சில முக்கிய விபரங்கள் கிடைத்துவிட்டன என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

**கச்சதீவு கண்காணிப்பு**

இதற்கிடையே கச்சதீவில் கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆயுதப்படையினர் தேடும்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில்

## வியாபாரம் மந்தம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் குறிகாட்டுவானில் நடைபெற்ற இராணுவ வீரர் துப்பாக்கிச்சூட்டுக் கொலைச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வியாபாரத்துறையில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரபல வர்த்தகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து சிலநாட்களாக மக்கள் பீதிகாரணமாக யாழ்ப்பாணத்துக்கு வருவதை குறைத்துக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

யாழ். நகருக்கு வரும் மக்களும் அதிகமாகப் பிற்பகல் 6 மணிக்கு முன்பாகவே தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிடுகிறார்கள்.

தீவுப்பகுதிகளிலிருந்துயாழ்ப்பாணத்துக்கு மக்கள் வருவது மிகவும் குறைந்துள்ளதாம்.

சினிமாத்தியேட்டர்களிலும் மாலை 6 மணிக்குப் பின்பு மக்கள் குறைவாகவுள்ளனராம்.

(மா)

## ஹெலிகொப்டர் சகிதம் திடீர்ச் சோதனைகள்!

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானில் நடைபெற்ற இராணுவ வீரர் துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுதப்படையினரின் ரோந்துச் சேவை யாழ். மாவட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான இடங்களில் ஹெலிகொப்டர் சகிதம் ஆயுதப் படையினர் திடீர்ச்சோதனை நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக வடபகுதி கடற்கரை ஓரங்களில் பலத்த கண்காணிப்பு செலுத்தப்பட்டுவருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ். பஸ்நிலையத்தில்வைத்து 'ஹிப்பி' போல் முடிவளர்த்திருந்த இரு இளைஞரை ஆயுதப்படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகத் தெரிகிறது.

இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## அரசாங்க வைத்தியர்கள் வேலைநிறுத்த முஸ்தீபு!

(கொழும்பு)

அரசாங்க வைத்தியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கவுள்ளனர்!

தங்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தில் (பென்ஷனில்) கூடுதலான அலவன்ஸ் சேர்க்கப்படவேண்டும் என்றமுக்கிய கோரிக்கையை முன்வைத்து அரசாங்க வைத்தியர்கள் வேலைநிறுத்தம் செய்யவுள்ளனர்.

இது சம்பந்தமாக ஒரு முடிவை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்க வைத்திய அதிகாரிகள் இம்மாதம் இருபதாம் திகதி விசேடகூட்டமொன்றை நடத்துவார்கள். அன்றைய கூட்டத்தில் வேலைநிறுத்தம் பற்றிய திகதி தீர்மானிக்கப்படும்.

ஒரே நாளில் ஒரே வீதியில்

## 5 பிரயாண வாகனங்களில் கொள்ளை நடந்தது!

(கொழும்பு)

ஒரே நாளில், ஒரே வீதியில், ஒரே கோஷ்டியினால், ஒரு பஸ் உட்பட ஐந்து பிரயாணிகள் வாகனங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

இச்சம்பவம் நாவலப்பிட்டியில் நிகழ்ந்தது.

நாவலப்பிட்டி கொத்மலை பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஐந்து வாகனங்கள் ஒரு கோஷ்டியினால் வழிமறிக்கப்பட்டு பிரயாணிகள் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளைபோன பொருட்களின் பெறுமதி எண்பதினாயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## "மின்களவைத் தவிர்க்க ஒத்துழைப்புத் தருக"

--அபி. சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சி சேவையால் பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளதென்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது, மின்விநியோகம் சம்பந்தப்பட்ட தீர்மானத்தின் மீது பேசுகையில் கவலை தெரிவித்தார்.

''மின்சாரம் களவாக எடுக்கப்பட்டு தொலைக்காட்சி சேவையை கிராமம்கிராமமாக

(8ம் பக்கம் பார்க்க)

# மின்விநியோக சீர்கேடு: 'அமிர்' கவலை

(யாழ்ப்பாணம்)

மின்சார விநியோகம் சீராக அமைக்கப்படாதது குறித்து எதிர்க்கட்சி முதல்வர் திரு.அ. அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கவலை தெரிவித்தார்.

யாழ்.மாவட்டஅபிவிருத்தி சபையின் கூட்டம் மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், மின்சாரசபையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எங்களுக்கு இல்லை என்று தெரிவித்தார்.

மின்சாரசேவைக்கு எம்.பி.க்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அதிக பணம் ஒதுக்கியும், சீராக நடாத்த முடியாமலிருப்பதாகக் கவலை தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், இது குறித்து அரசாங்க மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு முடிவுகாண வேண்டும் என்று சொன்னார்.

இதை சீராக அமைக்க ஒரு குழுவையும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபையில் தெரிவு செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சிறிய கிராம சபைகளால் கடன்பெற்று, செலுத்தமுடியுமானால் மாவட்டசபையினால் ஏன் கடன்பெறமுடியாது? என்று திரு. அமிர்தலிங்கம் வினவினார்.

முன்னர் மயிலிட்டி கிராம

(8ம் பக்கம் பார்க்க)

ELECTRICIANS உடன்தேவை

வெற்றிடங்கள் பத்து

மிகச் சிறந்த வேதனம் பெறும் வாய்ப்பு உண்டு. மேலும் விபரங்கட்கு பிறப்புப் பத்திரம், அனுபவ தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் உடனே தொடர்பு கொள்ளவும்.

கார்த்திகேசு பாலேந்திரன்,
''ரூபி வில்லா'', — வல்வெட்டித்துறை.
தொலைபேசி இல: 36 — வல்வெட்டித்துறை (2302)

அரிய சந்தர்ப்பம்
Computer Programming
புதிய பயிற்சி வகுப்புகள்.
20—02—82 வரை மாணவர் அனுமதிக்கப்படுவர்.
அனைவரும் சேரலாம் — நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி.
(அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)
11, மொம்சாக் கட்டடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (2298)

**மணிவாக்கு**

தனது உத்தியோகத்தை இழந்து புதுவேலை தேடி அலுவலகம் அலுவலமாக ஏறி இறங்கி அலைகின்ற மனிதனுடைய ஆவல் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு தீவிர ஆவலை இறைவன் பாற்கொள்ள வேண்டும். — ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## பயங்கரவாதம்: ஒரு தீவிரமார்க்கம்?

'வடபகுதியில் நிகழும் சில பயங்கரவாதச் செயல்களைத் தவிர இப்பிராந்தியத்தில் இலங்கை மிகப்பாதுகாப்பான நாடுகளில்ஒன்று' என்று பொலிஸ் மா அதிபர் திரு. அனு செனிவரத்தின தென்பளிக்கும் செய்தி ஒன்றை விடுத்திருக்கிறார்.

இன்றைய உலக நடப்பை உன்னிப் படித்தவர்களுக்கு இச்செய்தி உற்சாகம் அளிப்பதோடு சந்தேகத்தையும் கிளப்பவல்லது.

''இந்தச் சிறிய நாட்டில் இறைவன் இயற்கையை நன்ருகப் படைத்திருக்கிருன், ஆனல் மனிதனே அருவருப்புக்குரியவன்'' என்று ஸ்ரீபர் என்ற தலைசிறந்த ஆயர் அன்று ஏதோ ஆத்திரத்தில் பாடியிருக்கலாம்.

இருப்பினும் பொலிஸ் மா அதிபரும் மறைந்த ஆயரும் (அவர் பெயரால் திருச்சியில் ஒரு உயர் கல்லூரி உண்டு) ஒரு தலைப்பட்ட உண்மையை மிகைப்படுத்தியிருக்கிருர்கள் போல் தோன்றுகின்றது.

பிரிட்டிஷ் ராணியும், இந்திய ஜனதிபதியும் இந்நாட்டுக்கு விஜயஞ் செய்துவிட்டு பாதுகாப்பாகத் திரும்பியது எமது நாட்டின் காவற்படையினருக்கும் மக்களுக்கும் இருபுகழ்மாலைகளைப் பெற்றுக்கொடுத்தது.

அதேவேளையில் இந்தப் புகழ் நாட்டின் பொதுகாப்புக்குரித்தானலும் இன்றைய வாழ்க்கை முறையில் இடம்பெறும் வன்செயல்கள் அவை நிகழும் தொழில் நுட்ப அற்புத முறைகள் நாம் அமைதியாக வாழ வழி விடுமா?

பயங்கரவாதம் இலங்கையின் வடபகுதிக்குரிய நிகழ்ச்சியென்பது தற்சமயம் உண்மை. கடந்தகாலத்தை மறந்துவிடலாமா? பரந்துபட்ட பாரததேசத்தில் ஆட்சி நடத்தும் திருமதி இந்திராகாந்திக்கு எத்தகைய அபாயம் உண்டென்பதை அறியாதார் உண்மையில் எதுவும் அறியாதவர்களே. சோதிடமே அதுபற்றிக்குறிப்பிட்டதுடன் பத்திரிகைகளும் அதனை விளம்பரப்படுத்துகின்றன.

இந்தியா மட்டும்தானு? உலக ரீதியில் பார்த்தால் எங்குதான் பயங்கரவாதம் தலைகாட்டத்தவறியது? சோஷலிச நாடுகளின் அமைப்பில் பயங்கரவாதக் கோஷ்டிகளுக்கு இடமில்லை. சர்வாதிகார ஆட்சியில் தலைவருக்குத் தக்க பாதுகாப்பு இருப்பதுடன் எவ்வித வன்செயல்களையும் முளையிற் கிள்ளும் அதிகாரம் அன்ருடல் ஆட்சி முறையில் உண்டு.

மக்கள் ஆட்சி முறையில் கிழக்கோ மேற்கோபயங்கரவாதம் என்பது ஒரு மார்க்கமாக, தீவிர மார்க்கமாக வளர்ந்து வருவதை நாம் கேள்விப்படுகிறோம் சர்வதேச ரீதியிலே இதுதொழிற்படுகின்றது.

அமெரிக்காவில் இதுஎந்த அதிகாரம் பெற்ற இலட்சிய புருஷரான ஜனதிபதிக்கும் இடராகவே இருந்து வருகிறது. பயங்கரவாதத்தின் ஒரு பக்கம் இது; மற்றையது அமெரிக்கஆட்சிக்குப் பங்கமான வேறு நாடுகளின் தலைவர்களை ஒழித்துக்கட்டும் இயக்கமாகவும் தொழிற்படுவது உலகறிந்த விடயம்.

ஐரோப்பாவில் இதனை 'இட்டாலியன் ஸ்டைல்' என்று சொல்லும் வழக்கமுண்டு. வலதும் இடதும் சார்ந்தஇயக்கங்கள், நன்ருகப் பயிற்றப்பட்ட அதிநுட்பமான பேர்வழிகள் இரகசியப்படையாக அமைந்து, தனித்தனி வீரர் கெரிலாக் குழுஅதிநுட்பமான ஆயுதங் கொண்டு தேவைப்பட்ட வரை முடித்து விடுகின்றனர்.

இந்த விடயம் இன்று ஒரு பெருத்த விடயமாகின்றது; எந்த நாடும் இவ்வித பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி விட்டதென்று பேரம் பேச இயல்லாத நிலை. அரசுக்கும் காவற்படையினருக்கும் தீராத சவால்.

எனவே, இது எவ்வாறு வளர்கிறது? அரசியல் வன்செயல், பொருளாதார நெருக்கடி, இலட்சிய மோதல்கள், இனத்துவேசம் போன்ற பிணக்குகள் பாராளுமன்ற எதிர்க்கட்சி முறையில் பேச்சுவார்த்தைகளால், முடிவுகட்டமுடியாத நிலையில் பயங்கரவாதம் கிளம்புவது இன்று இயற்கையாய்விட்டது.

இதனை அடக்கி ஒடுக்க ஜனநாயகஆட்சியில் கையாளப்படும் அவசரகாலமுறை ஓரளவுக்குப் பலனளித்தாலும் முற்ருகத் துடைத்து விட முடிவதில்லை. ஏன்?

மிகச்சிறிய (பாக்கெட்டில் ஒளித்துவைக்கக்கூடிய) பயங்கர துவக்குகள், சுழல் துப்பாக்கிகள், வேகமாக இடம்விட்டு இடம்செல்லும் அபூர்வ வாகன வசதிகள் போன்ற தொழில் நுட்ப அற்புதங்கள், இவற்றில் திறம்படப் பயிற்சிபெற்ற இளைஞர் உலகளவில்உலாவுகின்றனர்.

ஐ. ஆர். ஏ., பி. எல். ஓ. போன்ற பயங்கர விடுதலைப் படையினர் ஒருபுறம்; பயங்கரவாதத்தை விரும்பிப் பயிற்சிபெறும் இளைஞர் கோஷ்டி மறுபுறம்; கொலை கொள்ளைக்கு இவற்றை உபயோகிக்கும் கூட்டம் இன்னெருபுறம். நாட்டுக்கு நாடு வேறுபாடிருக்கலாம்.

பொலிசாருக்கு பொது மக்கள் ஆதரவு இத்தகைய இரகசிய நடமாட்டங்களையும் அவற்றின் தீங்குகளையும் கண்டுபிடிப்பதில், தேவையானலும் வெற்றி கொடுக்குப் சாதனமல்ல.

எங்கள் நாட்டைப் பொறுத்தளவில் இந்த நோய் இங்கு பரவாதுதடுப்பது மிகமிக அவசியம். உலகம் ஒரு நாடாகச் சுருங்கிவிடுவது எல்லாவகையிலும் நன்மையல்ல.

பயங்கரவாதம் வடக்கில் தானுண்டு என்று விடயத்தை இலகுபடுத்துவது விவேகமல்ல; நாட்டில் எப்பகுதியிலும் இது இரகசிய வளர்ச்சியடையலாம். அரசியல் நிலைமையைப் பொறுத்தது.

காவற்படையினரின் திறமை தேவைப்படும்அதே நேரத்தில், நாட்டில் நிலவும் அவசிய பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதுவும் அவசியம்; அடக்குமுறைகளை அதிகரிக்காமல் அரசியல் விவேகத்தில் நம்பிக்கை கொள்வது நன்று.

பாரதிதரிசனம் 2

# காந்திஜியைப்பார்த்து "என்னஓய்" என்ருர்பாரதி!

இந்த நிலைமையில் பாரதி 'த இந்து'வுக்கும்இந்தியாவுக்கும் அரசியல் கடிதங்கள் எழுதத் தொடங்கியிருந்தார். ஞானபானுவுக்கு புனைபெயரில் எழுதினர். அது திருவல்லிக்கேணி தேசபக்தரான சுப்பிரமணியசிவாவினுல்வெளியிடப்பட்டுவந்தது. இவர் வ. உ. சிதம்பரம்பிள்ளையுடன் ஜெயிலுக்குப்போய் குஷ்டரோகத்துடன் விடுதலையாகியிருந்தார்.

யுத்தகாலம் பாட்டு எழுதுவதிலும் நண்பர்களுடன் பொழுது போக்குவதிலும் கழிந்தது. பாப்பா பாட்டு, ஒளியும் இருளும், வேய்ங்குழல் போன்ற கவிதைகள் இந்தக்காலத்தில் பிறந்தன.

### ஒருமைப்பாட்டில் நம்பிக்கை

இந்திய ஒருமைப்பாட்டில் அவர் தீவிர நம்பிக்கைகொண்டிருந்தார். இந்தியத் தாயை



மகாகவி பாரதியும் அவரது குடும்பமும் நண்பர்களும். கதிரையில் செல்லம்மா பாரதி, இரண்டாவது மகள் சகுந்தலாபாரதி. நிற்பவர்கள் மகாகவி பாரதியார் மூத்தமகள் கண்ணம்மாள் பாரதி. மற்றும் குடும்ப நண்பர்கள்.

'வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்' எனப் பாடலானர். பாரதத்தாயின்பிள்ளைகளுக்கிடையில் வித்தியாசங்களில்லை, அவர்களுக்குள் வேறுபாடுகள், சொந்தச் சகோதரர்களுக்கிடையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் போன்றவைதான் என்று அவர் கருதினர்.

### மன அமைதி இல்லை

புதுச்சேரி வாழ்க்கை எழுத்துத்துறையிலிருந்து கவிதையுலகுக்கு அவரை தீவிரமாக இழுத்துச்சென்றது. ஆனல் மன அமைதி இல்லை. வீட்டில் அவர் தரித்திருப்பது குறைவு. கடற்கரைகளிலும் மரச்சோலைகளிலும் ஏகாங்கி போல திரிவார். இதில் இரவு

முதலாம் உலகப்போர் முடிந்தகையோடு • சென்னை மாநில அரசு அரசியலில் அவர் ஈடுபடாதவிடத்து சற்று கருணை காட்டும் என்ற செய்தி கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாரதியார் நேராக கடயத்தில் தம் மனைவிஇருந்த இடத்துக்குச்சென்ருர். இங்கு தெய்வ வழிபாட்டிலும் இயற்கைக் காட்சிகளை இரசிப்பதிலும் அதிக நேரத்தைச் செலவிடத்தொடங்கினர். அத்துடன் தமது இலக்கிய ஆக்கங்களைக்கொண்ட 40 வால்யூம் தொகுப்பொன்றை வெளியிட முயற்சி எடுத்தார். ஒவ்வொரு தொகுப்பிலும் 10 ஆயிரம் பிரதிகள் வெளியிட அவர் திட்டமிட்டிருந்தார்.

### எட்டயபுரம் சென்ருர்

எதிர்பார்த்த அளவில் பொருளாதார உதவி கிட்டாததால் பாரதி எட்டயபுரமான தமது சொந்த ஊருக்குச் சென்ருர். அங்கு எட்டயபுரம் அரசரின் ஆதரவை

> சம்பிரதாயங்கள் எதையும் பார்க்காமல் காந்திஜி இருந்த அறைக்குள் நுழைந்து காந்திஜியைப் பார்த்து ''என்ன ஓய்!'' என்று விளித்தார். பின் அவர்பக்கத்தில் அமர்ந்துகொண்டார்.

என்றும் பகலென்றும் இல்லை. இவ்வாறு அமைதியின்றி எதைத் தேடுகிருர் என்பது எவருக்குமே புரிவதில்லை. ஆனல் அவருக்கு பெரும்மனப் போராட்டம் ஒன்று ஏற்பட்டிருப்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. இந்த நிலைமை 'குள்ளச்சாமி' என்று பாரதியாரால் பாசத்தோடு அழைக்கப்பட்ட ஊர்பேர் தெரியாத சாமியாரைச் சந்திக்கும்வரை தான் நீடித்தது. இந்தச் சாமியார் பாரதிக்கு மன அமைதியை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்ல அபின் சாப்பிடவும் பழக்கப்படுத்திவிட்டார். அதன்பிறகு அபின் இன்றி வாழமுடியாத நிலைக்கு ஆகிவிட்டார்.

நாடி நின்ருர்.

''தமிழ்ப் புலவர்களுக்கு உதவும் அரசர் இல்லை என்ற அவச்சொல் உன்னல் நீங்கும, தமிழ்நாட்டில் மகாகவிகள் எவரும் தோன்றுவதில்லை என்ற அவச்சொல் என்னல் நீங்கும்'' என்று மன்னரைப் புகழ்ந்து உதவியை நாடினர் பாரதி.

எட்டயபுரம் ராஜா மிகுந்த தமிழ்ப்பற்றுஉடையவர்தான். ஆனல் தமது அந்தஸ்தை அவர் இழந்துவிட விரும்பவில்லை. புரட்சிக்காரர் ஒருவருக்கு உதவிபுரிந்தால் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கோபத்துக்குள்ளாக நேரும் என்று கருதிய எட்டயபுரத்து ராஜா

(7ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## முஸ்லிம் ஒருவரும் இல்லையே!

சமீபத்தில் யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் சிபார்சு செய்யப்பட்ட 91 விசேஷ சேவை அதிகாரிகளில் ஒரு முஸ்லிமாவது இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் ஒரேயொரு முஸ்லிம் கிராமசேவையாளர் இருந்தார். அவர் மறைந்த பின் இதுவரையிலும் ஒரு முஸ்லிம் கிராமசேவையாளரும் நியமிக்கப்படவில்லை. இந்தக் குறையை இந்த விசேஷசேவை அதிகாரிகள் நியமனம் நிவர்த்தி செய்யும் என்ற எண்ணத்திலிருந்த முஸ்லிம்களின் மனதை இப்புறக்கணிப்பு வெகுவாக பாதித்துவிட்டது

பெரும்பான்மை இனமான சிங்களவர்களிடம் தமிழ்த்பேசும் சிறுபான்மை இனம்தின் உரிமைகளுக்காகவுப் சலுகைகளுக்காகவும் பல போராட்டங்களையும் நடாத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமிழ் பேசும் இனத்தின் ஒரு பகுதியாகிய முஸ்லிம்களைப் புறக்கணிப்பது நியாயமாகாது.

தற்போது நடந்துகொண்டிருக்கும் கிராமசேவை நேர்முகப் பரீட்சையில் பல முஸ்லிம்கள் தோற்றவிருக்கும் சந்தர்ப்பத்தையாவது பயன்படுத்தி இதுவரையிலும் முஸ்லிம்களுக்குள்ள குறையை அரசாங்கமாவது நிவர்த்தி செய்யவேண்டும்.

ஏ. லி. எம். பரீத்

யாழ்ப்பாணம்.

★ குறிகாட்டுவான் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

# இரண்டு துப்பாக்கி நபர்களையும் பொலிஸாருக்குத் தெரியுமாம்

(கொழும்பு)

குறிகாட்டுவான் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பான இரு சந்தேகநபர்களையும் தெரியும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் தலைமறைவாக இருந்துவருவதாகவும், இவர்களைக் கண்டு பிடிப்பதற்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் கடந்த சில காலமாக நிலவிவரும் நல்லுறவை முறியடிப்பதற்காகவே, தடைசெய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்தவர்கள் இப்படியான செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

''முப்படை அதிகாரிகள் அளித்த உறுதிமொழியை தொடர்ந்து கடந்தசில காலமாக பொதுமக்கள் மீதும் பொதுமக்களின் உடமைகள் மீதும் முப்படையினர் தாக்குதல் நடத்தவில்லை இதனால், முப்படையினர் மீது பொதுமக்களுக்கு பெரும் நல்லெண்ணம் ஏற்பட்டுவந்தது. யாழ்ப்பாணத்திலும், மற்றும் சிலஇடங்களிலும், நடந்த தாலிக்கொடி கொள்ளை திருட்டு தொடர்பான சந்தேகநபர்களை பொதுமக்களே மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்து வந்தனர்'' என்று தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி

''தைப்பொங்கல் தினத்தில் பல இடங்களில், ஏற்றப்பட்ட 'தமிழ் ஈழக்'கொடிகளை முப்படையினர் அகற்றினார்களே யொழிய, அதுதொடர்பாக, பொதுமக்கள் எவரும் தாக்கப்பட்டதாகவோ. துன்புறுத்தப்பட்டதாகவோ புகார்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் முப்படையினர் நல்லுறவு மேலும் வளர்ந்தது. இந்த நல்லுறவை நீடிக்கவிட்டால், தங்களுக்கு ஆபத்துஏற்படலாம் என்று அஞ்சியே தடைசெய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்தவர்கள். இப்படி செய்திருக்கின்றனர்'' என்றும் கூறினார்.

இராணுவத்தினரை சுட்டதின் மூலம், ஆத்திரமடைந்த முப்படையினர் பொதுமக்களை தாக்குவார்கள் என்றும், அதனால் பொதுமக்கள் முப்படையினர் நல்லுறவு பாதிக்கப்படலாம் என்று தடைசெய்யப்பட்ட இயக்கத்தினர் கருதியிருக்கலாம் எனவும், ஆனால் குறிகாட்டுவான் சம்பவத்தின் பின்னர் வடபகுதியில் பொதுமக்கள் எவரும் தாக்கப்படவில்லை என்றும், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் மட்டுமே முப்படையினர் கவனம் செலுத்திவருகின்றனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட நேரடி அனுபவத்தின் காரணமாகவே யாழ்ப்பாண நகரத்தில் உள்ள மக்கள் அச்சத்தினால் நேரகாலத்துடன் கடைகளை பூட்டினார்களே யொழிய, மறுநாள் வழக்கம் போல் கடைகள் திறக்கப்பட்டு சினிமாக்காட்சிகள் நடைபெற்றதாகவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின

யாழ். நகரத்திலும் சரி தீவுப்பகுதியிலும் சரி குறிகாட்டுவான் சம்பவத்தின்பின் பொதுமக்கள் எவரும் தாக்கப்படவில்லையென்றும்,முப்படையினர் சந்தேகத்திற்கிடமானவர்களை மட்டும் விசாரணை செய்வதிலேயே ஈடுபட்டுள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தனர். (க)

## விளாங்காடு புதிய சந்தை

(புலோலி)

வடமராட்சி கிழக்குப்பகுதியான குடத்தனை கிராம மக்களினதும் விவசாயிகளினதும் நன்மைகருதி குடத்தனை விளாங்காடு என்னுமிடத்தில் சந்தையொன்று நிறுவப்பட்டு வருகின்றது.

குடத்தனை கிராம அபிவிருத்திச்சங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுவரும் இச்சந்தை அமைப்புக்கென பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் 20,000 ரூபா பணத்தை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

## சமாதான நீதவான்

(பச்சிலைப்பள்ளி)

சரசாலையைச்சேர்ந்த திரு. எஸ். மார்க்கண்டு சமாதானநீதவானாக நீதிஅமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சமாதான நீதவானாக இதுவரை நியமிக்கப்படாததை அறவழிப் போராட்டக்குழுவினர் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அவரின் சிபாரிசின் பேரில் திரு. மார்க்கண்டு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைத் தொகுதியில்

## அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராய நடவடிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறைத் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் விஜயம் செய்யவுள்ளனர்.

பருத்தித்துறை எம் பி. திரு. க. துரைரத்தினத்தின் அழைப்பின் பேரில் மார்ச் 2—ம் திகதி இக்குழுவினர் அப்பகுதிகளைப் பார்வையிடச் செல்கின்றனர்.

இக்குழுவினர் குடத்தனை, நாகர்கோவில், குடாரப்பு செம்பியன்பற்று. மாமுனை, தாளையடி, மருதன்கேணி, உடுத்துறை, ஆழியவளை, முள்ளியான், சுண்டிக்குளம் ஆகிய பின்தங்கிய பகுதிகளைப் பார்வையிடுவார்கள்.

குடத்தனை, செம்பியன் பற்று, மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகங்களில் இக்குழுவினர் பொதுமக்களையும் பொதுஸ்தானங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் இக்குழுவினருடன் பல்வேறுபட்ட திணைக்களங்களின் தலைவர்களும் கூடச் செல்வார்கள்.

## நெற்கதிர்கள் திருட்டு

(சுழிபுரம்)

சுழிபுரம்—பறாளை வயல்களிலுள்ள நெற்காணிகளில் நெற்கதிர்கள் களவாக வெட்டப்படுகின்றது. வயல்காவலர்கள் இருந்தும் களவு நடைபெறுவதால் வயல் சொந்தக்காரர்கள் நெல் அறுவையில் இறங்கியுள்ளனர். பொன்னாலைப் பகுதியிலும் இம்மாதிரிக் களவு நடைபெறுகின்றது.

## இராணுவத்தினர் சோதனை

[மண்டைதீவு]

குறிகாட்டுவான் இறங்குதுறையில் நடைபெற்ற துப்பாக்கிசூட்டு சம்பவத்தையடுத்து கடந்த சனிக்கிழமை மண்டைதீவு சந்தியில் இராணுவத்தினர் பண்ணை பிரதான வீதியால் போக்குவரத்து செய்து கொண்டிருந்த வாகனங்களை தீவிர சோதனைக் குட்படுத்தினார்கள்.

## அமைச்சர் 'தேவா' பளைக்கும் விஜயம் செய்வார்

(பச்சிலைப்பள்ளி)

அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம் மார்ச் மாதம் 4 ம் திகதி பளைக்கு விஜயம் செய்வார்.

கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்குமாறு கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து அதுபற்றி பொதுஸ்தாபனங்களினதும், பொதுமக்களினதும் அபிப்பிராயத்தினை அறிவதற்காக கிளிநொச்சிக்கு வரும் அமைச்சர், கிளிநொச்சித் தொகுதிக்குள் அடங்கும் பளைப்பகுதிக்கும் விஜயம்செய்வார்.

அமைச்சரின் வருகைக்கு முன்னோடியாக கிளிநொச்சி எம். பி. திரு வீ. ஆனந்தசங்கரி பளைப்பகுதி ஆதரவாளர்களை அழைத்து, தனிமாவட்ட கோரிக்கை பற்றி எடுத்துக் கூறி அவர்களது அபிப்பிராயத்தை அறிந்ததாகவும் தெரியவருகிறது.

அதேசமயம் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப் பீடம் பளைப்பகுதியிலுள்ள முக்கிய பிரமுகரைத் தந்தி மூலம் அழைத்து, கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்படுவதினால் அங்கு சிங்களக் குடியேற்றம் ஏற்படலாமெனவும், கிளிநொச்சியின் அபிவிருத்தியையே யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய 10 எம்.பி.க்களும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றும், அதற்காக குறிப்பிட்ட தொகைப் பணத்தினை வருடா வருடம் ஒவ்வொ தொகுதி எம் பி.க்களின் உதவியுடன் ஒதுக்கிக்கொடுப்பதாகவும் தலைமைம்பீடத்தினால் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## இந்திராவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

புதுடில்லி, பெப். 16

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது'

இதற்கென விசேடமாகப் பயிற்சி அளிக்கப்பட்ட 300 பொலிசார்கள், மூன்று உதவிப் பொலிஸ் கமிஷனர்களின் தலைமையின்கீழ் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

தலைநகர்ல் திருமதி காந்தி வழமையாகச் செல்ணிம்பாதைகள், இடங்கள் என்பவை கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்படும் என்றும், சந்தேகத்துக்கு உரியவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீபத்தில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரோடு திருமதி காந்தி பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தபோது நபரொருவர் திருமதி காந்தியின் இல்லத்தினுள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றது தெரிந்ததே. அப்படியான செயல்கள் இனிமேலும் இடம்பெறாமல் தடுப்பதற்காகவே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## உணவு முத்திரை வழங்கும் திட்டம் ரத்துச் செய்யப்படலாம்

(கரவெட்டி)

''அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் எடுக்கப்பட்டதனால் கூட்டுறவுச் சங்கங்கள் பல பாதிக்கப்பட்டன. உணவு முத்திரை வழங்கப்படுவதும் விரைவில் இல்லாமல் போகலாம்''.

இவ்வாறு யாழ் கூட்டுறவு பிரதி ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தன் கட்டைவேலி—நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் பரிசுதியச் சேமிப்புச் சீட்டிழுப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இச்சீட்டிழுப்பு வைபவத்திற்கு சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்தார். பிரதி ஆணையாளர் திரு. ஜெயகாந்தன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாது இருந்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பசி பட்டினியால் இறந்திருப்பார்கள்.

''கடந்த அரசாங்க காலத்தில் மானிய உணவு கூப்பன் புத்தகங்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் வந்த பின்னர் கூப்பன் புத்தகங்கள் எடுக்கப்பட்டு உணவு முத்திரை வழங்கப்படுகின்றது. அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் எடுக்கப்பட்டதனால் கூட்டுறவுச் சங்கங்கள் பல பாதிக்கப்பட்டன. உணவு முத்திரையும் விரைவில் இல்லாமல் போகலாம்.

''கூட்டுறவுச் சங்கங்கள் கூப்பன் புத்தகங்களை உணவு முத்திரைகளை எதிர்பார்த்து சேவையாற்ற நினைக்கக் கூடாது. எந்த நிலையிலும் செயற்படக்கூடியதாக கூட்டுறவுச் சங்கங்கள் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்றார்.

நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வீ. டபிள்யூ. சிதம்டரப்பிள்ளை பேசுகையில்: ''நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் 1700 குழந்தைகளின் பெயரில்சேமிப்புக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பொழுதோ குழந்தைகளின் பெயரில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது. ''வங்கியில் பணத்தைத் சேமிப்புச் செய்வதால் குழந்தைகளின் எதிர்காலம் சுபீட்சமானதாக விளங்கும் என்பதை பெற்றோர் மறந்துவிடக்கூடாது'' என்றார்.

"தொழிலாளர்கள்

## ஒன்றுபட்டால்தான் ரூ. 85 கூலி உயர்வைப்பெறமுடியும்"

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ளசகல சுருட்டுத் தொழிற்சாலைகளிலும் சுமா 12,000 சுருட்டுத் தொழிலாளர்கள் அமைதியான முறையில் வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளதாக தொழிலாளர் சங்கங்களின் சார்பாக திரு ஆ. துரைராஜசிங்கமும், திரு. சி. பொ. வ. மா. க. முதலியாரும் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: ''தொழிலாளர்கள் ஒன்றுபட்டால்தான் தொழிலாளர் [illegible] கங்கள் தீர்மானித்த 85 ரூபாவைப் பெறமுடியும். தொழிலாளர்கள் முதலாளிகளின் [illegible]ந்தவிதமான ஒப்பந்தமுமல்லாமும் ஏமாறாமல் சங்கங்கள் தீர்மானித்தபடி 85 ரூபாவை ஒருசதமேனும் விட்டுக்கொடாமல் பெறவேண்டும்.

''வாழ்க்கைச்செலவு அதிகரித்துவரும் இவ வேளையில் தொழிலாளர்கள் தற்பொழுது பெறும் ஊதியம் [illegible] றுக்கு ஒருநேரச் சாப்பாட்டு[illegible] குச்கூடப் [illegible] தாதநி[illegible] ளது. சுருட்டு முதலாளி[illegible] இதை தமது [illegible] கொண்டு இந்தச் சிறிய [illegible] உயர்வு 85ரூ[illegible] முன்வரவேண்டும் [illegible] 250க்கு மேற்பட்ட [illegible] கள் 85 ரூபா கூலி [illegible] ஆதரித்து விளம்பரங்க[illegible] விட்டார்கள்' என்றும் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்லை முக்கொலை

# பதினறு சந்தேகநபர்களில் ஒருவர் பிணையில் அனுமதி

(புலோலி)

வல்லை முக்கொலைச் சந்தேக நபர்கள் பதினறு பேரில் ஒருவரை 7,500 ரூபா பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கம்பர் மலை அறுவர்பயங்கர துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவ எதிரிகளான இ. அப்புத்துரை, வே மகேந்திரன், சி. தில்லைநடராசா, இ. தங்கராசா, இ. துரைராசா, இ. தேவராசா ஆகிய அறுவரும் யாழ். சிறைச்சாலையிலிருந்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் இ. போ. ச. பஸ் வண்டியில் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டபோது வல்லை உப்புவெளிச் சந்தியில் இ. போ. ச. பஸ் வண்டி வழி மறிக்கப்பட்டுமுகமூடியணிந்த கோஷ்டியொன்றினல் தேவராசா, துரைராசா,. அப்புத்துரை ஆகிய மூவரும் துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் கொலைசெய்யப்பட்டனர்.

இப்பயங்கர முக்கொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் வி. குணபாலசிங்கம், என். ஜெகநாதன், வி. பாலசுப்பிரமணியம், கே. தாராசிங்கம், என். அழகேஸ்வரன், என். தங்கேஸ்வரன், என். இலங்கேஸ்வரன், இ. செல்வகுரு, சின்னப்பா, கே. சிவராசா, என். சச்சிதானந்தன், எஸ். சினிக்குட்டி. கே. அருணகிரிராசா, என். குருநாதன், எஸ். அழககுணராசா, என். புகழேஸ்வரன், வீ. ராஜ்குமார் ஆகிய பதினறுபேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்களில் அருணகிரிராசா என்பவரைப்பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணிகளான ஆர். ஸ்ரீசிவாயா, ஆர். டி. இரத்தினசிங்கம்ஆகியோர் யாழ். மேல்நீதிமன்றத்தில் பிணை மனுவொன்றைத் தாக்கல் செய்தனர். இப்பிணை மனு மீதான விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மேல் நீதிமன்றம் சந்தேக நபரை 7,500 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டதுடன் சந்தேகநபருக்கு சாட்சிகளுடன் எதுவித தொடர்பும் கொள்ளவோ அவர்களுக்கு தொந்தரவுகள் செய்யவோ கூடாதென்றும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கைச்சாத்திடவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

ஏனைய சந்தேக நபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பெண்கடத்தல் வழக்கு ஒத்திவைப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை பெண் கடத்தல். வழக்கின் துரட்சி திருத்தி அணைக்கப்படுவதற்காக இம்மாதம் 26-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஈசுரபாதம் சரோஜினிதேவி என்ற இளம் பெண்ணைக்கடத்திச் சென்றார்கள் என பாலசுப்பிரமணியம் ரவிசங்கர், வேலும் மயிலும் பிரேமநாத், நவரத்தினம் குணரத்தினம், துரைராசா உதயகுமார், மௌனகுரு செல்வகுரு, தங்கவேலாயுதம் தேவச்சந்திரன், பாலசுப்பிரமணியம் ஜெயசங்கர், சுந்தரம் விஜயகுமார், நாகமுத்து யோகேந்திரன் ஆகியோர் மீது வல்வெட்டித்துறைப் பொலிசார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வழக்கின் துரட்சி திருத்தி அணைக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு இம்மாதம் 26-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கின் 3—ம் எதிரியான நவரத்தினம் குணரத்தினம் வெளிநாடு சென்றுவிட்டதனல் அவர் இல்லாமலேயே வழக்கு விசாரணை செய்யபடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## நற்செய்தி கருத்தரங்கு

(கரவெட்டி)

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் இம்மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தி பற்றிய கருத்தரங்குகள் வடமராட்சி, பாஷையூர், அச்சுவேலி, வசாவிளான், ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இம் மாதம் 20ம் திகதியும், யாழ்ப்பாணம். நல்லூர், கோப்பாய், உரும்பராய், இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு 27ம் திகதியும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், மயிலிட்டி. ஊறணி, நாவந்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அடுத்த மாதம் 6ம் திகதியும், ஊர்காவற்றுறை, மிருசுவில், கிளிநொச்சிப் பகுதி ஆசிரியர்களுக்கு மார்ச் மாதம் 13ம் திகதியும், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, சுன்ஞகம், நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மார்ச் மாதம் 20ம் திகதியும் பிரஸ்தாப கருத்தரங்குகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரிதாப மரணம்

(கரவெட்டி)

கள் எடுக்க தென்னை மரத்தில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் மரத்தில் இருந்து தவறி விழுந்து ஸ்தலத்திலேயே மரணமானர்.

கிளிநொச்சி 6ம் வாய்க்காலில் இச் சம்பவம் நடந்துள்ளது,

காளிமுத்து என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையே தென்னைமரத்தால் விழுந்து மரணமானவராவார். மரண விசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## “தியானத்தின் மூலம் இறைவனை அடையலாம்”

[சாவகச்சேரி]

‘‘எம்மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனைத் தியானித்தோமாகில் ஆன்ம ஈடேற்றத்தைப் பெறலாம். தியான வழிபாட்டின் மூலமே இறைவனை அடையலாம். ஒவ்வொரு மனிதன் இதயத்திலும் இறைவன் இருக்கின்றன். இறைவன் எங்கு முள்ளவன் எங்கும் நிறைந்தவன்.’’

சாவகச்சேரிசப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவிலில் நடந்த பத்தாவது நாள் திருவிழாப் பூர்த்திவிழாவில் உரையாற்றிய சைவப்புலவர் கு. வி. மகாலிங்கம் கூறினர். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

‘‘நமது பொய்வேடத்தைக் களைந்து மெய்வேடமாக இறைவனை வழிபடவேண்டும். இறைவனைத்தேடி நாம் அலையவேண்டியதில்லை. ஒவ்வொரு மக்களின்இதயத்திலிலும்இறைவன் குடிகொண்டிருக்கிறன். வெளிப்பகட்டுக்காக நாம் கோயிலுக்குச் செல்லக்கூடாது. கோவில்களிலே கூட்டுப் பிரார்த்தனைகளில் இளைஞர், யுவதிகளை ஈடுபடச் செய்வதோடு அவர்களுக்குக் கடவுள் வழிபாட்டினல் வரும் நன்மைபற்றி நாம் எடுத்தியம்பவும் வேண்டும்’’ என்றார்.

திரு. ஆ. மண்டலேஸ்வரன், திருமதி. சு. சிவநாராயண மூர்த்தி, திருமதி. உ. சிவசம்பு உட்பட பலர் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

பகல் சங்காபிஷேகத்தை பிரம்மஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் நடாத்திவைத்தார்.

## சங்கக்கிளையில் திருட்டு: பொலிஸ் பாதுகாப்பில் காவலாளி

(புலோலி)

புலோலி பலநோக்கு கூட்டுறவுசசங்கக் கிளையொன்று இரவுவேளையில் ஓடுபிரிக்கப்பட்டு துணிவகைகள் பாவனைப் பொருள்கள் உட்பட சுமார் 6,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புலோலி தெற்கு கிளையிலேயே இத் திருட்டுச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக முகாமையாளர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை செய்து கிளையின் காவலாளியைக் கைது செய்தது.

காவலாளி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் திருட்டுப்போன பொருட்களின் பெறுமதியைச் சரியாகக் கணிப்பதற்காகப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இருப்பு எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

தபால் நிலையத்தில் அத்துமீறல்

# இளைஞர் கைது; ஒருவர் தேடப்படுகின்றர்

(பச்சிலைப்பள்ளி)

பளை தபால் நிலையத்திற்குள் அத்துமீறிச் சென்று தபாலதிபரையும் ஊழியர்களையும் பயமுறுத்தி அவர்களைக் கடமை செய்யவிடாது தடுத்த சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக மற்றெரு இளைஞர் தேடப்பட்டுவருகின்றர்.

எஸ். அருமைத்துரை என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட தபால் தந்தி அத்தியட்சகரின் புகாரை அடுத்தே சாவகச்சேரி பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்,

# குறைந்த விலையில் தொலைக்காட்சி பெட்டிகள்

(கொழும்பு)

கிராமப்புற மக்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தற்போதுள்ள விலையிலும் பார்க்க ஐம்பது சத வீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கையை ராஜாங்க அமைச்சு எடுத்துள்ளது.

ராஜாங்க அமைச்சு அமுல் நடத்தவிருக்கும் இத்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள விலையிலும் பார்க்க அரைவாசி விலைக்கு அல்லது மூன்றிலொரு விலைக்குக் கிராமத்தவர் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. சரத் அமுனுகம நேற்றுத் தெரிவித்தார்.

இத்திட்டம் விரைவில் அமுல் நடத்தப்படுமென்றும், உள்ளூரில் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொருத்தும் விதத்தில் உதிரிப் பாகங்களை இறக்குமதிசெய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினர்.

இத்திட்டத்தை அமுல்நடத்துவதன் மூலம் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொருத்தும் வேலைகளில் பெருந்தொகையானேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கமுடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

ரூபவாஹினி சேவை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமத்தவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விலையைக் குறைக்க ராஜாங்க அமைச்சு முன்வந்துள்ளது. (க)

# கல்லூரி மாணவி கிணற்றில் வீழ்ந்துமரணம்

(சாவகச்சேரி)

சங்கத்தானையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுதர்சினி என்ற கல்லூரி மாணவி வீட்டுக் கிணற்றில் நீர் அள்ளும்போது கால் தடக்கி விழுந்து மரணமானர்.

இதுசம்பந்தமான விசாரணையைச் சாவகச்சேரித் திடீர்மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் நடத்தினர்.

காலஞ்சென்ற சுதர்சனியின் தாயார் கமலாதேவி, காலமானவரை கிணற்றிலிருந்து தூக்கியதாகக் கூறப்படும் சுப்பிரமணியம் சிவானந்தம் என்பவர்களைச் சாவகச்சேரிப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஏ. இராசசிங்கம் ஆஜர்செய்தார்.

தாயார் கமலாதேவி சாட்சியமளிக்கையிற் குறிப்பிட்டதாவது:

பிற்பகல் 4 மணியளவில் நான் வீட்டிலிருக்கும்பொழுது எங்கள் கிணற்றடியில் ‘தொம், என்று ஒரு சத்தம் கேட்டது. நான் உடனே ஓடிச்சென்று கிணற்றடியில் நின்று கத்தினேன். அப்பொழுது சுப்பிரமணியம் சிவானந்தம் என்பவர் சற்றுநேரத்தால் ஓடிவந்து கிணற்றுள் குதித்து பிள்ளையை வெளியே தூக்கினர்—வெளியே எடுத்ததும் எனது மகள் என அடையாளம் கண்டேன். சிவானந்தன் என்பவர் முதல் சிகிச்சை செய்தும் பலன் கிட்டவில்லை. காரில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லத்தயார் ஆகமுன் பிள்ளை இறந்துவிட்டதாகச் சொன்னர்கள் என்றார்.

கிணற்றுள் வீழ்ந்து தூக்கிய சு. சிவானந்தன் என்பவரும் தான் தூக்கி பிரதம சிகிச்சையளித்தமாதிரியை விளக்கினர்.

சாட்சியங்களைப்பதிவுசெய்தபின் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## டாக்டர் சுகந்தன் மீண்டும் தெரிவு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கதிரைமாதா ஆலய பரிபாலன சபையின் முதலாவது கூட்டம் பங்குக்குரவர் அருட்திரு கில்லரி ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது சபையின் செயலாளராக டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

உபசெயலாளராக திரு. ஏ. மேரி ஜோசவ் பொருளாளராக திரு. எஸ். ஜேசுதாசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இப்பரிபாலனசபையின் சேவைக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## மாவட்ட வைத்திய அதிகாரி இல்லை

(பச்சிலைப்பள்ளி)

பளை அரசினர் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி இன்னும் நியமிக்கப்படாததினல் இப்பகுதி மக்கள் தொடர்ந்து கஷ்டம் அனுபவித்து வருகின்றனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் கருத்தரங்கு, மன்ற மண்டபத்தில் இம்மாதம் 0ம் திகதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் ‘இரசாயனப் பொருட்களின் பிரயோகமும் மனிதனின் சூழலும்’ என்னும் பொருள்பற்றி தொழில் ஆணையாளர் திரு. மு. பொன்னம்பலம் கருத்துரை வழங்குவார்.

யாழ். பொது சனநூலக புனரமைப்பு

# ரூ. 15 லட்சம் நிதி திரட்டும் திட்டம்

## 22-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். பொதுசன நூல்நிலையப் புனரமைப்புக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 லட்சம் ரூபா நிதி திரட்டும் திட்டம், இம்மாதம் 22ம் திகதி ஆரம்பமாகும். இம்மாதம் 25ந்திகதி நடைபெறும் கொடித் தினத்திலும். நூலக வாரத்திலும், கூட்டணி எம். பி.க்கள், யாழ். அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், நகரசபை ப. நோ. கூ. ச. தலைவர்கள், உறுப்பினர்கள் தத்தம் பகுதிகளில் முக்கிய பங்கெடுக்க இருக்கிறார்கள்.

யாழ். மாநகரசபை முதல்வர் திரு.இராஜா விசுவநாதன் யாழ். பொதுசன நூலகப் புனரமைப்புத் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''யாழ். பொதுசன நூல்நிலையத்தை மீள்வித்துப் புனரமைப்பதற்காக வேண்டப்படுவதாக . மதிப்பிடப்பட்டிருக்கும் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவில் மிகக் குறைந்தபட்சம் பதினைந்துலட்சம் ரூபாவையாவது யாழ்ப்பாணமாவட்டத்திற்குள்சேர்ப்பதை இலக்காக எடுத்துக் கொண்டு, அந்த முயற்சியில் வெற்றிபெறுப் வாய்ப்பைப் பெருக்குவதற்காக எதிர்வரும் 22ந் திகதி முதல் 28ந் திகதி வரை ஒரு நூலக வாரத்தையும், அவ்வாரத்துக்குட்படும் 25 திகதி வியாழக்கிழமையை நூலக கொடித் தினமாக அனுட்டிப்பதற்கும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

''யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் பதினைந்து லட்சம் ரூபாவைச் சேர்க்கும் எமது அபிலாசையை எளிதாக்கும் வகையில் நூற்றுக்கு நூறு வீதம் தமிழர் விடுவலைக்கூட்டணியினர் இடம்பெற்றிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை ஏற்கனவே யாழ். பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதிக்கு மூன்று லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியின் அந்தஸ்தைப் பயன்படுத்தித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாட்டுத் தூதுவராலயத்துடனும், இத்தீவுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள், பத்திரிகையாளர்களுடனும் தொடர்புகொண்டு யாழ். நூலகத்துக்கு நேர்ந்த இடர்ப்பாட்டை எடுத்துரைத்து, அவர்களுள் பலரை நேரடியாகவே யாழ்ப்பாணத்துச்கு அனுப்பிவைத்து அவர்கள் மூலம் நூலக மீளளிப்புக்கு பணியாற்றியவராவர். சர்வதேச மாநாடுகளில் கலந்துகொள்வதற்காக நூலகம் கொளுத்தப்பட்டதன் பின்பு வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் வெளிநாடுகளில் வதியும் தமிழரை இதுவிடயத்தில் சிரத்தை எடுக்கும்படியும்செய்திருக்கிறார். தமிழகத்திற்குத் தாம் மேற்கொண்ட விஜயங்களின்போது தாமே யாழ். மாநகர சபையினால் வெளியிடப்பட்ட நூலக மீட்பு மற்றும் புனரமைப்புச் சம்பந்தப்பட்ட விவரண வெளியீடுகளைத் தம்முடன் எடுத்துச் சென்று தமிழகத்தில் உள்ள தலைவர்களை, அரசியல் பிரமுகர்களை இதுவிடயத்தில் கரிசனைகொள்ளும்படி செய்துள்ளார். காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறனை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து, திரு நெடுமாறன் மூலம் தமிழகத் தலைவர்களை இதில் நேரடியாக ஈடுபடும்படி செய்துள்ளார். கட்சி சார்பற்ற முறையில் யாழ். நூலகம் சம்பந்தமாகத் தமிழக முதல்வர் கூட்டிய மாநாட்டில் யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்துக்கு இலவசமாக அங்குள்ள பதிப்பகங்கள் புத்தகங்களை அன்பளிப்புச்செய்யும் நிலையேற்பட்டதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையும், அதன் பாராளுமன்ற உறுப்பினர்களும் எடுத்துவரும் பெரும் அக்கறைதான் காரணமாகும்.

இதன் காரணமாகத்தான் வெகு விரைவில் யாழ். பொதுசன நூல்நிலையத்தின் மீள்விட்புக்கான அன்பளிப்புக்களைப் பெறுவதற்காக அங்கிருந்து தகவல் கிடைத்ததும் எந்த நேரத்திலும் தமிழகம் புறப்படத் தயாராக இருக்கும்படி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடம் எம்மிடம் கேட்டுக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. அங்ஙனம் யாழ். நூலக மீட்புக்காகப் பாடுபட்டு வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்கும் எமக்கும் இடையே சிண்டு முடிவதற்கு சிலர் எடுத்துவரும் முயற்சி எமக்குப்பெரும் மனவேதனையைத் தருகிறது.

''யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறும் இவ்வியக்கம் சம்பந்தப்பட்டதொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், நகரசபைத் தலைவர்கள், ஆகியோருக்கு முதன்மைதரும் வகையில் முதற்கொடியை அவர்களுக்கு அணிவித்தே கொடித்தின அனுட்டானத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளன. எந்தப்பாடசாலை எந்தத் தலைவருக்கு முதல்கொடியை அணிவித்து அவ்வத் தொகுதிகளில், பட்டினங்களில், கிராமங்களில் கொடித்தினத்தை ஆரம்பித்து வைக்கவேண்டுமென்பதை சம்பந்தப்பட்ட தலைவர்கள் வதியும் இடங்களுக்கும் குறிப்பிட்ட பாடசாலைக்கும்உள்ள தூரத்தைக் கணித்து பாடசாலை அதிபர்கள் முடிவுசெய்வார்கள்,

''போற்றுபவர்கள் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும் அது பற்றித் துக் கவலைகொள்ளாது தலைமைப்பீடத்தின் மனப்பூர்வமான ஆதரவுடனும், நல்லாசியுடனுமே நாம் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம். (க)

---

எழுதுமட்டுவாள்

## தீ வைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் தீவைப்பு வழக்கில் இரு எதிரிகளும் விடுதலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் திரு. எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த வீ. கிருஷ்ணகோபால், க. பாலசிங்கம் ஆகியோக் அவ்வூரைச்சேர்ந்த கந்தன் சின்னத்தம்பி என்பவரது வீட்டிற்குத் தீவைத்து 75,000 ரூபாவரை சேதம் விளைவித்ததாகச் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பொலிஸ் தரப்பில் சார்ஜன்ட் செல்லையாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி சுரேந்திரனும், எதிரிதரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஸ்ரீசிவாய, செ. அம்பிகைபாலன், சீ. பாலகிருஷ்ணர் ஆகியோரும் ஆஜராகினர்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார். (க)

---

## புதிய அதிபர்

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய புதிய அதிபராக திரு. எஸ். சிவானந்த சுப்பிரமணியசர்மா நியமிக்கப்பட்டுள்ளார் திரு. எஸ். கனகநாயகம் சேவையிலிருந்து இளைப்பாறியதைத் தொடர்ந்தே புதிய அதிபர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

---

## கலவானதொகுதி தேர்தல் ஆட்சேபமனு ஏப்ரல் விசாரணை

(கொழும்பு)

கலவான தொகுதி தேர்தல் ஆட்சேபமனுவின் விசாரணை ஏப்ரல் மாதம் 5ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கலவானதொகுதி எம். பி யாக திரு சரத்முத்தெட்டுவேகம தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (வெ)

---

## கொடித் தினத்துக்கு முன்னோடி நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நூலக வாரத்தையொட்டி இம்மாதம்25ம்திகதி கொடித்தினம் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கொடித்தினம் வைபவரீதியாக 23ம் திகதி காலை 9 மணிக்குநடைபெறும்

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு முதலாவது கொடியை யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் அணிவிப்பதன் மூலம் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

---

# ஆந்திரா முதலமைச்சர் பதவி விலக தீர்மானம்

ஹைதரபாத் பெப். 16

ஆந்திரா பிரதேச முதலமைச்சர் திரு. சி. அஞ்சய்யா பதவி விலக தீர்மானித்துள்ளார். இதுதொடர்பாக கட்சியின் மேலிடத்திற்கு அறிவித்துள்ளதாகவும் திரு. அஞ்சய்யா இன்று ஹைதரபாத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவரின் பதவிவிலகல் தொடர்பாக ஆந்திரா சட்டசபை உறுப்பினர்களைச் சந்திப்பதற்காக மத்திய தொழில் அமைச்சர் திரு. என் டி. திவாரியும், இந்திராகாங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பனாரும் இன்று ஹைதரபாத் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வெ)

---

# இராணுவவீரர் கொலை: 'சிவா' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''தமது கடமையைச் செய்யும் இராணுவவீரரைச் சுட்டுக் கொல்வது ஒரு அர்த்தமற்ற கொலையாகும். இத்தகைய வன்செயல்களை நாம் எப்போதுமே கண்டித்து வருகிறோம்''

இவ்வாறு அண்மையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இத்தகைய அர்த்தமற்ற கொலைகள் எந்தப் பிரச்னையையும் தீர்த்துவைக்கமாட்டாது. மாறாக இவை பிரச்னைகளை அதிகரிக்கவே செய்யும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இந்தக் கொலையை கண்டிப்பதோடு இந்த இராணுவ வீரரின் நிர்க்கதியான குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

---

# கச்சதீவுக்கு முதலுதவி சிகிச்சைமுகாம்

(பண்டத்தரிப்பு)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு மார்ச் மாதம் 11 ந் திகதி முதல் 15—ந் திகதி வரை இயங்கவுள்ளது.

முதலுதவிச் சிகிச்சை முகாமில் கடமையாற்றுவதற்காக விசேஷ பயிற்சி பெற்ற ஒன்பது முதலுதவியாளர்களைக் கொண்ட குழுவொன்று யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் படைப் பிரிவின் ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தலைமையில் மார்ச் மாதம் 10—ந் திகதியன்று கச்சதீவு புறப்படவுள்ளது.

---

4 தங்கப்பவுண

# நம்பிக்கை மோசடி செய்ததாகப் புகார்!

(யாழ்ப்பாணம்)

சங்கிலி செய்யக்கொடுத்த 4 தங்கப் பவுண நம்பிக்கை மோசடி செய்ததாக செய்யப்பட்ட புகாரை தொடர்ந்து சந்தேக நபரான சாவகச்சேரியை சேர்ந்த இ. யோகேஸ்வரன் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

விசேடபுலனாய்வு குற்றத் தடுப்பு இன்ஸ்பெக்டர் திரு. வி. எஸ். பிள்ளை சந்தேக நபரை கைது செய்து யாழ்ப்பாணம் நீதிபதி திரு, ரி.ராஜாகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

கன்னாதிட்டியைச் சேர்ந்த தங்கராசா ஆறுமுகம் சந்தேக நபரிடம் 4 தங்கப்பவுண கொடுத்ததாகவும் இவற்றில் முக்கால் பவுண் மட்டும் பாலசிங்கம் குபேந்திரனிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

யாழ். நீதிபதி சந்தேகநபரை மார்ச் மாதம் 2ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மா—க)

---

# இடமாற்றம்

[மண்டைதீவு]

மண்டைதீவு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சிறிபாலன் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து அராலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால், இவரது இடத்துக்கு புதியவர் ஒருவரை நியமிக்கும் வரை அல்லைப்பிட்டி கிராம சேவை அலுவலர் திரு. க. கணேசவேலு தற்காலிகமாக இப்பகுதிக்கும் கிராமசேவை அலுவலராக கடமையாற்றிவருகின்றார்.

---

## தேசியமயமாக்கும் மசோதா

பாரிஸ், பெப் 16

பிரதான வங்கிகளையும் கைத்தொழில் நிறுவனங்களையும் தேசியமயமாக்கும் மசோதா ஒன்று பிரெஞ்சு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

பிரெஞ்சு சோஷலிஸ அரசாங்கத்தின் தேசிய மயமாக்கற் கொள்கைத் திட்டத்தின்படி தாக்கலான இம்மசோதாவில் 34 வங்கிகள், 2 உருக்கு நிறுவனங்கள் 2 நிதிக்கம்பெனிகள் தேசியமயமாக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்கள் தேசியமயமாக்கப்படும் பட்சத்தில் அவற்றின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

# ச.ச.நிலைய ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

கொட்டடி கற்குளலேன் ஸ்ரார் சனசமூக நிலையத்தின் 9வது ஆண்டு நிறைவுவிழா அடுத்தமாதம் 3ம் திகதி புதன்கிழமை நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார்.

காலையில் 10 மைல் மரதன் ஓட்டம், 50 மைல் சைக்கிள் ஓட்டம் முதலான நிகழ்ச்சிகள் இடம்பெறும். தொடர்ந்து சிறுவர் நிகழ்ச்சிகளும் பிற்பகல் கயிறுஇழுத்தல், உதைபந்தாட்டம், விநோதஉடை, கிறிஸ்கம்பம் ஏறுதல் முதலான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதனும், திருமதி. விசுவநாதனும் பரிசுகளை வழங்குவார்கள். (அ)

---

## சிவராத்திரிவிழா

(வேலணை)

எதிர்வரும் திங்கட்கிழமை நாரந்தனை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாரந்தனை சரவணை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினரால் மகாசிவராத்திரி விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் பகல் சுவாமிக்கு விசேட அபிஷேகங்களும், அதைத்தொடர்ந்து மாலையில் இருந்து அதிகாலை வரை சமய அறிவுப்போட்டி சமயச் சொற்பொழிவுகள், இசைக்கச்சேரி, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. சமய அறிவுப்போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது.

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெய்சித்ரா
**கல்யாணமாம் கல்யாணம்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
**FIVE ANGRY WOMEN**
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
19 ம் திகதிமுதல் **ஞானக்குழந்தை**

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45 7—00: 9—30
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON
**Three The Hard Way**
(Action-color-adults)
Awaits HORROR EXPRESS

**WINDSOR** (JAFFNA)
Daily 10.30, 2.00, 4.30, 7.00, 9.30
17th to 19th only
ROBERT DE NIRO in
**Taxi Driver** (Strictly for adults)
மாட்டின் ஸ்கோசெ என்பவருடைய தனிமையும் பலாத்காரமும் சேர்ந்த முரண்பாடான ஆராய்ச்சி உண்மையாகவே அதிர்ச்சியைக் கொடுக்கும் அனுபவம்

**Rajah** JAFFNA
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
From 17 to 18
SIDNEY PEITER in
**THE WILBY CONSPERACY**
(Color-Scope)
**ராஜா** 19-2-82 வெள்ளி முதல்
செம்மீன் புகழ் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளிவிழா சித்திரம்
பிரதாப்-சுரேகா நடித்த
**தக்காரா**
(கலர்—மலையாளம்)

**யாழ். றீகல்** தினசரி 10—30, 2—30, 6—15, 9—30 நான்குகாட்சிகள்
காட்சிகள் வழமைபோல் காண்பிக்கப்படும்
**இன்றே பாருங்கள்!**
நிறம் மாறாத பூக்கள் புகழ்
**விஜயன் ராஜேஷ்**
சுருளிராஜன், மாஸ்டர் ரவிக்குமார், சத்தியகலா, சுவர்ணலத
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:- "நீயா" புகழ் துரை







தென்மராட்சியின் அபிவிருத்தியில் அக்கறைகொண்டு குடிசைக் கைத்தொழில் பலவற்றை அறிமுகம்செய்து வைத்ததுடன், விவசாயத்திலும் இளைஞர்களுக்கு ஊக்கமளித்த கொடிகாமத்தைச் சேர்ந்த அமரர் சின்னையா தம்புவின் நினைவுதினம் இன்றாகும்.

உடுப்பிட்டி, அச்சுவேலிபாடசாலைகளில், ஆசிரியராக கடமையாற்றிய பின், சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியில் 25 வருடகாலம், ஆசிரியராக பணியாற்றினார்.

சவர்க்காரம், சாம்பிராணி, பற்பொடி, கற்பூரம், பன்னீர், போன்றவற்றை உற்பத்தி செய்து குடிசைக் கைத்தொழில்களை, இளைஞர் மத்தியில் அறிமுகம்செய்துவைத்தார். இவர் கொடிகாமம் ஐயனார் கோவில் பரிபாலகர்களில் ஒருவராவர். குருபாவா அவர்களின் சிஷ்யரான இவர், கிராமங்கள் தோறும் சமய போதனைகளில் ஈடுபட்டார். கொழும்பில் குருபாவா அவர்கள் ஆச்சிரமத்திற்கு செல்லும் வழியில் அவர் இறைவனடிசேர்ந்தார். அவர் ஆத்மா சாந்தியடைக.

—எஸ்.எம். கமலநாதன்.

## விளையாட்டு விழா

(மாவிட்டபுரம்)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வருடாந்த விளையாட்டு விழாவை நடத்த வலி. வடக்கு விளையாட்டு அதிகாரி திரு. ஏ. முருகையா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இப்பிரிவில் விளையாட்டு அதிகாரி பதவி காலியாக இருப்பதால் வலி. வடக்கு விளையாட்டு அதிகாரியிடம் இவ்விழா தொடர்பான ஏற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 28ம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதத்தில் முடியும் விதத்தில் இவ்விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், எல்லே, வலைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி என்பன இவ்விழாவில் இடம்பெற உள்ளன.


குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**வெலிங்டன்** **சுன்னாகம்** ... **வெல்லி** **ஊனிப்பாய்**
தினசரி: 2.30 6.15 9.15
**நூல்வேலி**

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
**வண்டிக்கா ரன் மகன்**

**ஸ்ரீதர்** யாழ். நகர்
தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**
(புதிய பிரதி)


கம்பர்மலை அறுவர் கொலைவழக்கு:

# சாட்சிகள் ஆஜராகவில்லை விசாரணை ஒத்திவைப்பு

(புலோலி)

கம்பர்மலை அறுவர் கொலை வழக்குச் சாட்சிகள் மன்றில் ஆஜராகி இருக்காதபடியால் இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 25 ம் திகதி இரவு கம்பர்மலையைச் சேர்ந்த கந்தையா அழகம்மா, நாராயணசாமி அழகம்மா, யோகானந்தன் ஜெயநாயகவதி, நாராயணசாமி சாந்தேஸ்வரன், கே. யோகானந்தன் நாராயணசாமி கருணேஸ்வரன் ஆகியோரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தார்களெனக் குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் தில்லைநடராசா, மகேந்திரன், தங்கராசா, துரைராசா, தேவராசா, தில்லை நடராசா இந்திரன் ஆகிய ஏழு பேர் மீதும் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

எதிரிகள் எழுவரில் வல்லையில் வைத்துத் துப்பாக்கியால் சுடப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் கொலைசெய்யப்பட்ட துரைராசா, தேவராசா, அப்புத்துரை ஆகியோர் தவிர்ந்த மகேந்திரன், தில்லை நடராசா, தங்கராசா, இந்திரன் ஆகிய நான்கு எதிரிகளும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கவேண்டிய சாட்சிகள் மன்றில் ஆஜராகி இருக்காதபடியால் நீதவான் வழக்கு விசாரணையை இம்மாதம் 25 ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

பொலிசார் சார்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் டேவிட்டும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எம். வேலும்மயிலும், ஆர். டி. இரத்தினசிங்கம் ஆகியோரும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான என். கிருஷ்ணராசா, கே. முத்துக்குமாரு, எஸ். சிவானந்தன் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

# இன்றைய பலன்

மாசி மாதம் 5 ம் திகதி
புதன்கிழமை
(17—2—82)

மேடம்: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும், நண்பர் ஒருவர் உமது காலைவாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம், செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

இடபம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும், காதலர்களுக்கு கனகுஷியானதினம், சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

மிதுனம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும், சகோதர வழியாலும் சஞ்சலம் உண்டு.

கடகம்: ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், மனதில் புதிய உற்சாகம் பிறக்கும், பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு, இல்லத்திலும் இனியவை நடக்கும்.

சிங்கம்: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடம் உண்டு, புதிய முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

கன்னி: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு, உயர். கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

துலாம்: தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளை தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், பூமிப்பிணக்குகளினால் கவலை தோன்றக்கூடும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், சிறு பிணிக்கும் இடமுண்டு, அமைதி நன்று.

தனு: மனம் நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும், பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும், கைவிடப்பட்ட பண வரவு மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு, வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு.

மகரம்: குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும், பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும், ஆத்திர உணர்ச்சியால் மோதல் ஏற்படும், அமைதியுடன் இருக்கவும்.

கும்பம்: கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும், வாகனம் செலுத்துபவர்கள் மக்கள் ஆதரவைப் பெறுவர், சுபதினம்.

மீனம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு, நீண்ட நாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்குவரும், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தி இன்று கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# ஜெயந்திவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி விழாவைநாளை காலை கல்லூரி விவேகானந்தர் மண்டபத்தில் கொண்டாடுகிறது.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராகவிரிவுரையாளர் திரு. பி. சந்திரசேகரம்கலந்துகொள்வார்.

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் இவ்விழாவில் சிறப்புரையாற்றுவார். கல்லூரி மாணவர்களின் பக்திப்பாடல்களும் இடம்பெறவுள்ளது.

(வெ)

# கட்டாக்காலி நாய்கள் கொல்லப்பட்டன

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராம அபிவிருத்தி உப அலுவலக எல்லைப்பிரதேசத்தில் ஐம்பத்தைந்து கட்டாக்காலி நாய்கள் சுகாதாரப் பகுதி ஊழியர்களால் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட விசேட வாகனம் மூலமாக காஸ் பாய்ச்சப்பட்டு நாய்கள் கொல்லப்பட்டன.

சுழிபுரம் கிராம அலுவலக ஊழியர்களும், சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களுக்கு உதவியாக பணியாற்றினர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எங்களிடம் அடைவு கடைகளுக்கும் வியாபார ஸ்தாபனங்களுக்கும் வீட்டுப்பாவனைக்கும் உகந்ததுமான இரும்புப் பெட்டிகள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். இரும்புப் பெட்டி தயாரிப்பாளரும், பழுதுபார்ப்பவர்களும், 'எவர் சில்வர் மாளிகை', நி: 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2278

## பயிற்சி

வெல்டிங், வயறிங், செய்முறை, அறிமுறையுடன் (28—2—82)ஆரம்பம். ட.E,T. ஐலண்ட், 58, ஸ்ரான்லி ரோட், விகாரைக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2287

## விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கு உகந்த ($1\frac{1}{4}$) ஒன்றேகால் பரப்புக் காணி இராசாவின் தோட்டத்தில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: கெ. த. தே. எற்வேட், 15, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (2295)

E Y 11 மொடல் A 40 கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. (ஸ்கூட்டருக்கு மாற்றி அமைக்கலாம்) தொடர்பு: C. S. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம். (2294)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/14568-ம் இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம், நல்லூர், 13, செட்டித்தெரு, சதாசிவம் கந்தையாவுக்குப் போகவேண்டிய தீர்வைத்தொகை 31,650 ரூபாவும், மேலும் இதில் 30,000 ரூபாவுக்கு 7—10—74 தொடக்கம் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 18% வட்டியும், வழக்குச்செலவு ரூபா 775·94 சதமும், விற்பனவுச் சலார்களும், இதில் கொடுபட்ட ரூபா 20,000/- கழித்து மிகுதித் தொகையைப் பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம் 49, ஆஸ்பத்திரி வீதி, முத்துக்குமாரு இராமலிங்கத்திடமும், முத்துக்குமாரு இராமலிங்கம் மகள் தேவகனியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1982 மார்ச் 12 ந் திகதி (12—3—82) காலை 10 மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

ஆதன விபரம்: வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலப்பளிப்பகுதி முகமாலை இக்காவிற் கோவிற்பற்று கிளாலி இறை ''காரைக்காடு தோட்டம்'' ஏக்கர் நாற்பதும் தென்னைகளும், எல்லை கிழக்கும் தெற்கும் இராமலிங்கம் பெண் இராசம்மாவினுதனம், வடக்கு ரூமன்கதலிக் சேச்சுக்குரிய ''அலரிக்காடு'' ஆதனம், மேற்கு கிராமச்சபை ரோட், பதிவு B 61/132. இவ்வாதனம் அளவையாளர் T, கந்தையாவால் 3—2—71ல் அளந்து விபரிக்கப்பட்ட 4946 இலக்கப் படத்தில் உள்ளது.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம். (2290)

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி.

பதிவு இல: யா/1553

## பதவி வெற்றிடங்கள்

1. **பண்டசாலை மேற்பார்வையாளர்**
   சம்பள அளவுத் திட்டம்:
   300 — 15 × 12 + 20 × 3 — 540.

2. **உள்ளகக் கணக்காய்வாளர்**
   சம்பள அளவுத் திட்டம்:
   350 — 15 × 7 + 20 × 8 — 615.

**மேற்படி பதவிகளுக்கான தகைமைகள்:**

அ. 197 - 05 12 ஆந் திகதிய 15009/12A ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை (அதி விசேஷமானது) இல் உள்ளவாறு. இதனை எப் ப. நோ. கூ. சங்கத்திலும் பார்வையிடலாம்.

ஆ. வயது 30 — 50 வருடம்.

இ. சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கும், கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்களைச் சங்கத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

சங்கத்தால் ரூபா 2/—க்கு வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே, விண்ணப்பங்களை ''தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 05—03—82 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

கரவெட்டி,
15—02—82

சோ. இராமலிங்கம்
பதில் பொது முகாமையாளர்.
2276

## சேவை

உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள், பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளில் இருந்தால் பாஸ்போட், ரிக்கற், விசா பெற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 2272, C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2272

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை

## அறிவித்தல்

1982—ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5—ந் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். அபிவிருத்திச் சபைப் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களால் கிளிநொச்சித் தொகுதியில் இருக்கும் கராச்சிக்கிராமத்தில் கிராமியப் பாலம் அமைப்பதற்கு பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் ரூபா 100,000·00க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10—30க்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ரூபா 100·00 வைப்புப் பணமாகவும் ரூபா 25·00 கிரயமாகவும் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகத்தில் செலுத்துவதன் பேரில் 1982.03·1 ந் திகதி மாலை மூன்று மணி வரை கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்கள் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

அன்ரன் அல்பிரெட்,
பிரதிச் செயலாளர்,
(நிர்வாகம், சட்டம்,
வேலைப்பகுதி)
யாழ் அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
திணைக்களம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
15—02—1982. (2292)

## மட்டக்களப்பு மாவட்டகோஷ்டி

யாழ்ப்பாணம்)
விளையாட்டமைச்சின் ஆதரவில் மாவட்டரீதியாக நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரண்டாம் தடவை முல்லைத்தீவில் முல்லைத்திவு மாவட்டக்கோஷ்டியுடன் மோதிய மட்டக்களப்பு மாவட்டக் கோஷ்டி 3—1 என்ற கோல்களால் மீண்டும் வெற்றிபெற்றது.

ஏற்கனவே மட்டக்களப்பில் நடைபெற்ற போட்டியிலும் மட்டக்களப்பு மாவட்டம் 12—0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (உ.இ)

## நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு ஊசி

[சாவகச்சேரி]
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இதுவரை 1200 நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வந்தகுழுவினர் சாவகச்சேரி சுகாதார பொறுப்பதிகாரி திரு. கே நடராசா, இணைப்பதிகாரி திரு. எஸ். செல்வபாஸ்கரன் ஆகியோரின் உதவியுடன் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது. [சு[

# யாழ். மத்திய கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி

(அரியாலை)
யாழ். மத்திய கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையே யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான கிரிக்கட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி இனிங்சாலும், 38 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது,

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ், மத்திய கல்லூரி 5 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 213 ஓட்டங்களைப்பெற்று தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது, சௌந்தரராசா ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்ருர். போல்பிரகலாதன், கே. உமாசுதன் ஆகியோர் முறையே 47, 21 ஓட்டங்களைப்பெற்றனர். மகிந்தா 20 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

மகாஜனக் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 83 ஓட்டங்களைப்பெற்றது. எட்வேட் 3? ஓட்டங்களைப்பெற்ருர். தோமஸ் 40ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளையும், கே. உமாசுதன் 10 ஓட்டங்களைக்கொடுத்து 2விக்கட்டுகளையும் பெற்ருர்கள்.

அடுத்து ஆடிய மகாஜனக் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களைட் பெற்றது. சிறிநாதன், குகதாசசிங்கம், எட்வேட் ஆகியோர் முறையே 22, 17, 15 ஓட்டங்களைப்பெற்றனர். கே. தோமஸ்45ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும், கே. உமாசுதன் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

### வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணக்கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையே மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது பிரிவுக்கான கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

யாழ்ப்பாணக்கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப்பெற்றது. ரகுராஜ், முரளிதரன், வெங்கடேஸ்வரன் ஆகியோர் முறையே 34, '0, 22 ஓட்டங்களைப்பெற்றனர். எஸ். பகீரதன் 56 ஓட்டங்களுக்கு 5விக்கட்டுகளையும். ஜெயசீலன் 52 ஓட்டங்களுக்கு 2விக்கட்டுகளையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்து கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களைப்பெற்றது. ஈ. ஜோஜ் 40 ஓட்டங்களைப்பெற்ருர். முரளிதரன் 24 ஓட்டங்களுக்கு 5விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

யாழ்ப்பாணக்கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 8விக்கட்டுகளை இழந்து 87 ஓட்டங்களைப்பெற்றநிலையில் ஆட்டத்தைநிறுத்திக் கொண்டது. பிரேம்குமார், முரளிதரன் ஆகியோர் முறையே 22, 21 ஓட்டங்களைப்பெற்றனர். ஜெயசீலன் 28 ஓட்டங்களுக்கு 3விக்கட்டுகளையும், ஸ்கந்தராசா 25ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கட்டுகளை இழந்து 77 ஓட்டங்களைப்பெற்று நேரம் முடிவடைந்ததால் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பகீரதன் 42ஓட்டங்களைப்பெற்ருர். முரளிதரன் 12 ஓட்டங்களைக்கொடுத்து 1விக்கட்டைப் பெற்ருர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (இ)

# காந்திஜியைப்பார்த்து

(3ம் பக்கத் தொடர்ச்சி)
பாரதியின் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. பாரதி செட்டிநாட்டில் உதவியை நாடிச் சென்ருர். அங்கு வரவேற்பும், ஆதரவும் கிட்டிய போதிலும் ஊரின் நினைவும், மனைவியின் பாசமும் உறுத்தவே திருநெல்வேலிக்குத் திரும்பினுர்.

### அமரத்துவமான படைப்புகள்

பாரதி தன் வாழ்வின் இறுதி நான்கு ஆண்டுகளிலும் தன்னைப் பற்றிய மேலான ஒரு கருத்தைக் கொண்டவராக இருந்தாரென்று தெரியவருகின்றது. தனது படைப்புக்கள் அமரத்துவமானவை என்று அவர் அப்போதே கருதியிருக்கிருர். இது அவரது எழுத்துக்களிலும் வெளிப்பட்டிருக்கின்றது.

இந்தக் காலத்தில்தான் தமது ஊன்றுகோலைச் செங்கோல் போல் கையில் வைத்துக்கொண்டு ஒரு அரசன் வீற்றிருப்பதுபோல் நாற்காலியில் அமர்ந்து அவர் படம் எடுத்துக்கொண்டது!

### சிங்கத்தின் பிடரியில் தட்டி....

இந்தக் காலத்தில் திருவனந்தபுரத்துக்கு ஒருமுறை சென்றபோது அங்குள்ள மிருகக்காட்சிச்சாலையில் சிங்கத்தின்பிடரியில் தட்டிக்கொடுக்க விரும்பி அதிகாரிகளிடம் அனுமதி கோரினுர் பாரதி. அனுமதி கிடைத்தது.

ஓ! சிங்கராஜனே! இதோ கவிராஜன் வந்திருக்கிறேன்'' என்று கூறி அதன் பிடரியில் தட்டிக்கொடுத்தாராம் பாரதி அச்சமயத்தில் அந்தச் சிங்கம் மூன்று முறை கர்ஜித்து ஓய்ந்ததாகக் கூறப்படுவதுண்டு:

### காந்திஜியுடன் சந்திப்பு

தாம் அமரத்துவமானவன், சகலரும் சமமானவர்களே என்ற கருத்து பாரதியின் நெஞ்சில் வலுப்பெற்றிருந்தது என்பதற்கு அவர் மகாத்மா காந்தியை முதன்முதல் சந்தித்த நிகழ்ச்சி ஒரு சரியான உதாரணம் எனலாம்.

சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காகப் பாரதியார் வந்திருந்தார். இது நடந்தது 1919ம் ஆண்டு. அதேசமயம் மகாத்மா காந்தியும் சென்னைக்கு வந்திருந்தார் இதையறிந்த பாரதியார் ஒரு நாள் பிற்பகல் வேளையில் காந்திஜி இருந்த வீட்டுக்குச் சென்ருர். எதுவித சம்பிரதாயங்களையும் பார்க்காமல் காந்திஜியின் அறைக்குள் நுழைந்து வெகு சாதாரணமாக ''என்ன ஓய்!'' என்றுகூறியபடி காந்திஜி அமர்ந்திருந்த கட்டிலிலேயே அமர்ந்துகொண்டார். பிறகு ''மிஸ்டர் காந்தி'' என அழைத்து இன்று கடற்கரையில் நடக்கும் கூட்டத்தில் தலைமை வகிக்கமுடியுமா? என்று கேட்டார்.

''மன்னிக்கவேண்டும். இன்று என்னுல் வரமுடியாது. உங்கள் கூட்டத்தை நாளைக்கு வைத்துக்கொள்ள முடியுமா?'' என்று காந்திஜி கேட்டார்.

''இல்லை. முடியாது நான் விடைபெறுகின்றேன். மிஸ்டர் காந்தி, நீர் ஆரம்பக்கவிருக்கும் இயக்கத்துக்கு என் வாழ்த்துக்கள்,'

பாரதயார் எங்ஙனம் வந்தாரோ அதேவிதமாக வெளியேறிவிட்டார்.

காந்திஜிக்கு ஆச்சரியம் தாளவில்லை. பக்கத்திலிருந்த ராஜாஜியிடம் வினவினுர்

''இவர்தான் எங்கள் தமிழ் தேசியக் கவிஞர்'' என்று விளக்கினுர் ராஜாஜி. காந்திஜி மிகவும் கவலையுற்று 'இவரை மிகவும் அக்கறையோடு கவனிக்க வேண்டும் [illegible] செய கூடிய [illegible] என்று [illegible]

# அமைச்சரவை உபகுழுவை 'நடா' இன்று சந்திக்கின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு.நடராசா, அமைச்சரவையின் உபகுழுவைச்சந்திக்கும் பொருட்டு கொழும்பு சென்றுள்ளார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் அதிகாரங்கள் குறித்து முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்பாகத் தொடர்ந்து ஆலோசனை நடத்தும் பொருட்டே மாவட்டசபைத் தலைவர் கொழும்பு சென்றுள்ளார்.

இன்று நடைபெறும் இப்பேச்சுவார்த்தையின் போது, மாவட்டசபையின் கீழ் இயங்கவிருக்கும் 15 திணைக்களங்களின் அதிகாரங்கள் குறித்து திரு. நடராசா வலியுறுத்துவார் எனத் தெரியவருகிறது.

வேலை வாய்ப்பு விவகாரம் முக்கிய இடம் வகிக்குமென நம்பப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தைகளின் தீர்மானங்கள் ஜனாதிபதி—த. வி. கூட்டணி உயர்மட்டப் பேச்சுக்களின் போது சமர்ப்பிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். (மா)

## அரசு முன்னுரிமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக ஆராய மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அபிவிருத்திசபை உறுப்பினர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள் அடங்கிய உயர் மட்ட மகாநாடொன்று கூட்டப்படவேண்டும்'' என்ற தீர்மானத்தை திரு. அழகையா சபைடல் பிரேரித்து உரையாற்றுகையில்தான் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

''நாங்கள் ஒரு பாரிய பொறுப்பை ஏற்றிருக்கிறோம். ஆனால் இதுவரை உருப்படியான திட்டங்கள் எதையுமே நாம் நிறைவேற்றவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

''திணைக்களங்களைப் பொறுத்தவரை நல்லவர்களைத் தந்திருந்தாலும் அவர்களுக்கும் எங்களுக்குமிடையில் நல்ல இணைப்பு இருக்கிறதாகத் தெரியவில்லை.

''மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திகளுக்கு அரசாங்கம் உதவிசெய்வதாக அறிகின்றேன். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அப்படி இல்லை.

54 உள்ளூராட்சி சபைகள் செய்த பணியை நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது. மக்களைத் திருப்திப்படுத்துவது பெரிய பணி. பணிசெய்வதற்கே இங்கு வந்திருக்கிறோம்.

திரு. எம். தம்பிமுத்து பேசுகையில், ''மற்றைய மாவட்டங்களுக்கு அரசு உதவுவதைக்கண்டோ அல்லது எமது மாவட்டத்துக்கு உதவி செய்யாததைக் குறித்தோ உளம் நோகாமல், எந்தவிதமான ஏமாற்றத்துக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளாகாமல் செயல்படவேண்டும்'' என்றார். (மா)

## மின் இணைப்பு வேலைகள்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியால் புத்தூர் கிராமசபையின் 1ம், 2ம், 9ம் வட்டாரங்களுக்கு மின்சார இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

கோப்பாய்த் தொகுதி முன்னாள் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். பின்னர் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரமும், யாழ். மாவட்டசபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரையும் எடுத்த முயற்சியினால் மின் இணைப்பு வேலைகளுக்கு 6 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலைய உறுப்பினர்கள், சிரமதான உதவிகளைச் செய்து வருவதனால், வேலைகள் மார்ச்மாதத்திற்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

## மின்விநியோக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை இருந்த காலத்தில் வைப்பில் இடப்பட்ட கடனில் ஒரு பகுதியை இப்பொழுதுசெலவு செய்வதற்கு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அனுமதி வழங்கியும் யாழ். செயலக அபிவிருத்திசபைஉத்தியோகத்தர் பணம் வழங்குவதற்கான அனுமதியை மறுத்தாராம். அப்படி இந்த உத்தியோகத்தர் நிராகரிக்க முடியுமானால், அபிவிருத்தி வேலைகள் எப்படி நடக்கமுடியும்?'' என்று அவர் கேட்டார். (மா)


# ஹோம் பினான்ஸ் லிமிட்.

திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

திடகாத்திரமான

சைக்கிள்கள் (HELMET-தொப்பிகள்)

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

மின் பம்புகள்

கட்டுப்பணமுறையிலும் பெறலாம்

# ஹோம் பினான்ஸ் லிமிட்.

இல. 82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


## இப்படியும் நடக்கிறது

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை என்பது, பொதுவான குற்றச்சாட்டு.

ஆனால் வவனியா மாவட்டத்தில் சில பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் இருந்தாலும் அங்கு அவர்கள் இருப்பதில்லையாம்!

வரவு இடாப்பில் கையெழுத்துக் காணப்படும். ஆனால் அவர்களைச் சந்தைகளிலும் வீடுகளிலும்தான் பார்க்க முடியுமாம்!

மற்றுமொரு குற்றச்சாட்டு —

மாணவர் நலன்கருதி கல்விச்சேவைக்கென யுனெஸ்கோ நிறுவனம் பாடசாலைகளுக்கு வழங்கிய 'டிரான்சிஸ்டர்' வானொலிகள், பாடசாலையிலிருந்து மறைந்து வீடுகளில் தான் பாடுகிறதாம்!

ஃ ஃ ஃ ஃ ஃ

ஆசிரியர் பற்றுக்குறைப் பட்டியலில் மற்றுமொரு தகவல் —

பருத்தித்துறை கிழக்குப் பகுதியிலுள்ள கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, கேவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, போக்கறுப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஒரே ஒரு ஆசிரியர்தான் எல்லாம்!

ஊடுருவி

# கிரிக்கெட் டெஸ்ட் யுகத்தில் இலங்கை இன்று அடிஎடுத்து வைக்கிறது

(கொழும்பு)

இலங்கை — இங்கிலாந்து முதலாவது கிரிக்கட் டெஸ்ட் இன்று கொழும்பு சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் ஆரப்பமாகின்றது.

இதன்மூலம் இலங்கை, கிரிக்கட் டெஸ்ட் யுகத்தில் பிரவேசித்துள்ளது.

இலங்கைக் கோஷ்டியின் தலைவராக பந்துலவர்ணபுரவும் இங்கிலாந்து கோஷ்டியின் தலைவராக கீத்பிளெச்சரும் ஆடுகிறார்கள்,

ஆட்டம் நடைபெறும் ஐந்து நாட்களும் தமிழ்—சிங்கள— ஆங்கிலமொழிகளில் வானொலி நேர்முகவர்ணனையும் மும்மொழிகளிலும் தொலைக்காட்சி வர்ணனையும் இடம் பெறும்.

இலங்கை கோஷ்டி வீரர்கள் விபரம் வருமாறு:

பந்துலவர்ணபுர (காப்டன்) டிரூலிப் மென்டில் (உதவி காப்டன்), சிதாத் வெற்றிமுனி, ரோய் டயஸ், அர்ஜுன ரணதுங்கா, அனுரா ரணசிங்க, ரஞ்சன் மடுகல்ல, அசந்தா டி மெல், டி. எஸ். டி சில்வா, அஜீத் டி. சில்வா, மகேஷ்குணதிலகா, கலுப் பெருமா.

ஆட்டத்தில் பங்குபற்றும் 11 வீரர்களின் விபரம் இன்று காலை ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அறிவிக்கப்படும்.

### முத்திரை வெளியீடு

இந்த டெஸ்டை ஒட்டி 2 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை ஒன்றை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று ஆட்டம் நடைபெறும் மைதானத்தில் இடம்பெறும் வைபவத்தில் வெளியிட்டுவைப்பார்.

## கச்சதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள் கச்சதீவை ஒரு மையமாகக்கொள்ளவோ அல்லது கச்சதீவை ஏதோ ஒருவகையில் பயன்படுத்தலாம் என்று கருதியே இங்கு கடற்படை முகாம் அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது,

கச்சதீவில் அடுத்தமாத ஆரம்பத்தில் புனித அந்தோனியார் ஆலய உற்சவம் நடைபெறவிருக்கிறது. உற்சவ காலத்தில் கச்சதீவுபபகுதியை கடுமையான கண்காணிப்புக்குள்ளாக்கும் முன்னோடியாகவும், கச்சதீவு கடல் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளை உடனடியாக பரவலாக விஸ்தரிக்கும் நோக்கத்துடனுமே கடற்படை முகாம் அமைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை தொகுதி சாரணர்அணித்தலைவர்பயிற்சி முகாம் கடந்த 12ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இம் முகாமில் 38 சாரண அணித்தலைவர்களும், உதவி அணித்தலைவர்களும் பங்கு பற்றினர்.

மேற்படி ம. ம. வித்தியாலய அதிபர் திரு. கே. குணபாலசிங்கம் பயிற்சி முகாமை கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்ட பயிற்சிக் குழுவினர் இப்பயிற்சியை நடாத்தினர்

யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி இறுதிப்பயிற்சிநாளன்றுகலந்து கொண்டு சாரணர்களுக்கு சரன்றிதழ்களை வழங்கினர். (மா—க)

## மின்களவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துகிறார்கள். இக்களவைத் தடுக்க சம்பந்தப்பட்ட மக்களை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன். இக்களவைத் தவிர்ப்பதற்கு, மக்கள் ஒத்துழைக்க வேண்டும்'' என்று திரு. நடராசா பகிரங்க வேண்டுகோள் ஒன்றை இக்கூட்டத்தில் விடுத்தார்.

கிராமங்கள் தோறும் சிறு சிறு படமாளிகையில்(தொலைக்காட்சி சேவை) உருவாக்கப்படுவதாகவும், இவற்றுக்கெல்லாம் அதிகமாகக் கள்ளத்தனமாகவே மின்சாரத்தைப் பாவிக்கிறார்கள் என்றும் தெரிவித்த தலைவர், இந்த மின்சாரக் களவைத் தடுக்காவிட்டால் பெரும் நஷ்டத்தை நாம் எதிர்நோக்கவேண்டியேற்படும் என்றும் குறிப்பிட்டார்.


# லொறிகள் விற்பனைக்கு

நல்ல பாவனையிலுள்ள மூன்றுலொறிகள் விற்பனைக்கு உண்டு. காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். விலைபற்றிய விபரங்களை எம்முடன் கலந்தாலோசித்து ஒழுங்கு பண்ணலாம்.

22 ஸ்ரீ 5615 மொறிஸ்

22 ஸ்ரீ 9073 ஒஸ்ரின்

27 ஸ்ரீ 2041 பி.எம்.ஸி.

## மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.

போன்: 8267


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126.